# குறிப்புரைகள்

## CCE பதிவேட்டின் மின் ஆளுமைக்கு வரவேற்கிறோம்!

**CCE மின் பதிவேட்டின் சிறப்பம்சங்கள் :**

1. FA(a), FA(b) மற்றும் SA ன் மதிப்பெண்களை உள்ளீடு செய்தாலே, தானாகவே உரிய கலங்களில் தரநிலை தானாகவே பதிவு செய்யப்படும் .
2. மூன்று பருவத்திற்கும் மதிப்பெண்களை உள்ளீடு செய்ய வசதி ஏற்படுத்தப் பட்டுள்ளது.
3. உடற்கல்வி, பாட இணைச் செயல்பாடுகளை டிக் மார்க் இடும் வசதி.
4. ஒரு பருவத்திற்குரிய மதிப்பெண்களை உள்ளீடு செய்த மறுநிமிடமே, பருவ முடிவில் உதவி தொடக்க கல்வி அலுவலகம் அனுப்ப ஏதுவான தர அறிக்கையை பிரிண்ட் செய்ய முடியும்.
5. இறுதியாக முப்பருவ தொகுப்பு தர மற்றும் மதிப்பெண் அறிக்கையையும் பெற இயலும்.
6. ஒவ்வொரு பருவ தர அறிக்கையிலிருந்தும் மாணவர் முன்னேற்ற அறிக்கையில் குறிக்க ஏதுவாக கிரேடு முறைக்கு கன்வர்ட் செய்யும் வசதியும் உள்ளது.
7. ஒவ்வொரு காலாண்டிலும் வட்டார வள மையத்திற்கு சமர்ப்பிக்கும் Educational Status & Monitoring Tool எனப்படும் அறிக்கையைப் பிரிண்ட் செய்யும் வசதி.
8. ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலோ அல்லது ஆண்டு இறுதியிலோ ஒவ்வொரு தனிப்பட்ட மாணவனின் அறிக்கையையும் பிரிண்ட் செய்யலாம்.
9. பள்ளியில் இப்பதிவேட்டை கணினியில் பயன்படுத்தும் போது , மாணவர் இடை நுழைந்து மதிப்பெண்களை மாற்றாமல் இருக்க பாஸ்வேர்ட் லாக் செய்யும் வசதி.
10. எந்த ஒரு பக்கத்தையும் உடனே பிரிண்ட் செய்ய, பிரிண்ட் மெனு தரப்பட்டுள்ளது.

**பயன்படுத்தும் முன் கவனிக்க வேண்டியவை :**

- இம்மின் பதிவேட்டைப் பயன்படுத்த Microsoft Office Excel 2007 மற்றும் Vanavil Avvaiyar Font நிறுவப்பட்டிருக்க வேண்டும்.
- Microsoft Office Excel 2007 தொகுப்பில் Macros Enable செய்யப்பட்டிருக்க வேண்டும். அதைச் செய்யும் வழிமுறைகள்:




படத்தில் காட்டப் பட்டுள்ளது போன்று Options button ஐ Click செய்யவும்.




Enable this content எனும் option ஐ தேர்வு செய்து Ok பட்டனை click செய்யவும்.

sheet ஐ save செய்து,close செய்து மீண்டும் திறக்கவும்.

- Enter master password எனக் கேட்கும் இடத்தில் cce123 என டைப் செய்து உள்ளே செல்லவும்.
- தமிழ் பாட பகுதியில் மட்டும் மாணவர் பெயர்,பதிவு எண் மற்றும் பள்ளியின் பெயரை மட்டும் பதிவு செய்தால் போதுமானது. இதர பக்கங்களில் தானாகப் பதியப்படும்.
- வரிசை எண்களை ஆண்,பெண் பாகுபாடு இல்லாமல் தொடர்ச்சியாக தரவும்.
- குறிப்பிட்ட வண்ணங்கள் இடப்பட்ட கட்டங்களில் மட்டும் உள்ளீடு செய்தால் போதுமானது.
- ஒவ்வொரு வகுப்பிற்கும் தனித்தனி Excel file கையாளுவது நலம்.
- அனைத்து உள்ளீடுகளும் கொடுத்து File சேமிக்கும் போது(Save) சற்று பொறுமை காக்கவும். ஏனெனில் இது சற்று அதிக அளவுள்ள ஃபைல் மற்றும் அனைத்து ஃபார்முலாக்களையும் அப்டேட் செய்ய 20 முதல் 30 வினாடிகள் எடுத்துக் கொள்ளும். பொறுத்திருந்து ஃபைலை சேவ் செய்யவும்.
- இம்மின் தொகுப்பைப் பயன்படுத்தும் போது ஏற்படும் எந்த விதமான இழப்பீட்டுக்கும் இத் தொகுப்பை உருவாக்கியவர் பொறுப்பன்று! இது மதிப்பீட்டு முறையில் கணிசமான வேலைப் பளுவைக் குறைக்கும் ஒரு தனிப்பட்ட முயற்சியே. எனவே குறைகளும், தவறுகளும் ஏற்பட வாய்ப்புண்டு. தவறுகள் காணப்பட்டால்teachertn.com@gmail.com என்ற ஈமெயில் முகவரிக்கு தவறாமல் தெரிவிக்கவும். நமது ஆசிரிய நண்பர்களுக்கு இன்னும் மேம்பட்ட மின் ஆளுமை தொகுப்பினைத் தர இயலும்.

**நன்றி!**